**சுருக்கம்**

ஆட்சி எல்லை – ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் வட்டத்தைப் பிரித்து தாளவாடியை தலைமையிடமாக கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [வ.நி.1(1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.66** நாள்: 09.02.2016.

**படிக்கவும்:**

1. அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 09.06.2003
2. அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.06.2012.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு கடித எண். 4596 /2013/ஈ.1, நாள் 12.05.2013.
4. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ந.க. பணி6(4)/24823/2013, நாள் 15.07.2014

---

**ஆணை:-**

ஈரோடு மாவட்டத்திலுள்ள, சத்தியமங்கலம் வட்டத்தைப் பிரித்து தாளவாடியில் ஒரு புதிய வட்டம் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 31.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், தாளவாடி பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் குழந்தைகளுக்கு சாதிச் சான்றிதழ்கள் பெறுவதற்கும், நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கும், இதர சான்றுகள் பெறுவதற்கும் தாளவாடியில் இருந்து சத்தியமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரமுடிவதில்லை என்றும், மலைப்பகுதியாக இருப்பதால் அடிக்கடி பேருந்து வசதி இல்லை எனவும் தெரிவித்து சத்தியமங்கலம் வட்டத்தை பிரித்து தாளவாடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தைப் பிரித்து தாளவாடியில் ஒரு புதிய வட்டம் உருவாக்குவது தொடர்பாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் கீழ்க்கண்டவாறு விவரங்களை தெரிவித்துள்ளார் :-

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ள சத்தியமங்கலம் வட்டம் | கோரிக்கையின்படி | | அரசாணை எண்.279, வ.து. நாள் 9.6.2003–ன் படி குறித்த நிலை |
|---|---|---|---|---|---|
| | | | உத்தேச தாளவாடி வட்டம் | எஞ்சிய சத்தியமங்கலம் வட்டம் | |
| 1 | தலைமையிடம் | சத்தியமங்கலம் | தாளவாடி | சத்தியமங்கலம் | |
| 2 | பரப்பளவு (சதுர கி.மீ) | 766.39 ச.கி.மீ | 244.69 ச.கி.மீ | 521.70 ச.கி.மீ | குறைந்தளவு 250 ச.கி.மீ. முதல் அதிகளவு 2000 ச.கி.மீ. |
| 3 | மக்கள்தொகை | 322978 | 65548 | 257430 | குறைந்தளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோபிசெட்டிபாளையம் | கோபிசெட்டிபாளையம் | கோபிசெட்டிபாளையம் | |
| 5 | வருவாய் வட்டத்தின் பெயர் | சத்தியமங்கலம் | தாளவாடி | சத்தியமங்கலம் | |
| 6 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | பவானிசாகர்<br>கோபிசெட்டிபாளையம் | பவானிசாகர் | பவானிசாகர்<br>கோபிசெட்டிபாளையம் | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | நீலகிரி<br>திருப்பூர் | நீலகிரி | நீலகிரி<br>திருப்பூர் | |
| 8 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | சத்தியமங்கலம்<br>பு.புளியம்பட்டி | – | சத்தியமங்கலம்<br>பு.புளியம்பட்டி | |
| 9 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | சத்தியமங்கலம்<br>பவானிசாகர்<br>தாளவாடி | தாளவாடி | சத்தியமங்கலகம்<br>பவானிசாகர் | இரண்டு அல்லது 3 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் |
| 10 | டவுன் பஞ்சாயத்துக் களின் எண்ணிக்கை (பெயருடன்) | அரியப்பம்பாளையம்<br>பவானிசாகர்<br>கெம்பநாயக்கன்பாளையம்<br>தாளவாடி | தாளவாடி | அரியப்பம்பாளையம்<br>பவானிசாகர்<br>கெம்பநாயக்கன் பாளையம் | |
| 11 | உள் வட்டங்களின் எண்ணிக்கை | 1. தாளவாடி<br>2.சத்தியமங்கலம்<br>3.பவானிசாகர்<br>4.புன்செய் புளியம்பட்டி<br>5. அரசூர்<br>6. குத்தியாலத்தூர் | தாளவாடி | 1. சத்தியமங்கலம்<br>2.பவானிசாகர்<br>3.புன்செய் புளியம்பட்டி<br>4. அரசூர்<br>5. குத்தியாலத்தூர் | |
| 12 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 76 | 20 | 56 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 13 | கிராம பஞ்சாயத்துகள் எண்ணிக்கை | 40 | 10 | 30 | |
| 14 | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் இருக்கும் கிராமங்கள் | கொங்கஉறள்ளி 75 கி.மீ | கொங்கஹள்ளி 20கி.மீ | | |

4. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில், தாளவாடி வட்டம் அரசாணை (நிலை) எண். 279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி அமையவில்லை என்றாலும், தாளவாடி மலைப்பாங்கான பகுதி என்பதால் குன்றுகள் நிறைந்த மலைப்பாங்கான பகுதிகளுக்கு இவ்வளவுகோலினை செயல்படுத்த வேண்டாம் என்றும் தாளவாடியை தனி வட்டமாக உருவாக்கலாம் என்றும் புதியதாக உருவாக்கப்படவுள்ள தாளவாடி வட்டத்திற்கு மொத்தம் 21 பணியிடங்களும் இதில் 9 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும் 12 பணியிடங்கள் புதிதாக உருவாக்க ஒப்பளிப்பு வழங்கவும், ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.33,58,500/– மற்றும் தொடரா செலவினமாக ரூ.19,13,000/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(i) ஈரோடு மாவட்டத்திலுள்ள, சத்தியமங்கலம் வட்டத்தைப் பிரித்து புதிய தாளவாடி வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்படவுள்ள தாளவாடி வட்டத்திற்கு மொத்தம் 20 பணியிடங்களும் இதில் 12 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும் 8 பணியிடங்கள் புதியதாக உருவாக்கப்படுகிறது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் / தற்காலிகம் | சத்தியமங்கலம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | சத்தியமங்கலம் வட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள் | தாளவாடி வட்டத்திற்கு மறுபரவலமர்த்தல் செய்யவேண்டிய பணியிடங்கள் | தாளவாடி வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | தாளவாடி புதிய வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 (6+7) |
| அ. பொதுப்பிரிவு | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | 1 (மண்டல துணை வட்டாட்சியர்) | – | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் மிகைப் பணியிடம் –1 | நிரந்தரம் | 3 | 2 | – | – | – |
| 4 | உதவியாளர் மிகைப் பணியிடம் –4 | நிரந்தரம் | 8 | 3 | 1 | – | 1 |
| 6 | நில வருவாய் ஆய்வாளர் | நிரந்தரம் | 6 | 5 | 1 | – | 1 |
| 7 | இளநிலை உதவியாளர் மிகைப் பணியிடம் –1 | நிரந்தரம் | 3 | 2 | – | – | – |
| 8 | தட்டச்சர் | நிரந்தரம் | 1 | 1 | •1 | – | 1 |
| 9 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 10 | 7 | 3 | – | 3 |
| 11 | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 12 | இரவுக்காவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| | மொத்தம் | | 36 | 25 | 7 | 4 | 11 |

மண்டல துணைவட்டாட்சியர் மிகைப் பணியிடம் – 1 அப்பணியிடம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பணிக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

4 உதவியாளர் மிகைப் பணியிடங்கள் உள்ளன. இவை சமூக பாதுகாப்பு மற்றும் தேர்தல் பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மாற்றம் செய்ய வேண்டும். மீதமுள்ள 2 மிகை பணியிடங்களை தேவைப்படும் இடங்களில் மாற்றம் செய்ய வேண்டும்.

1 இளநிலை உதவியாளர் பணியிடமும், சமூக பாதுகாப்பு பிரிவில் 1 இளநிலை உதவியாளர் மிகை பணியிடமும் உள்ளன. இதனை தேவைப்படும் இடத்தில் மாற்றம் செய்ய வேண்டும்.

* திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம் உருவாக்கப்படும் போது ஏற்பட்ட தட்டச்சர் –1 மிகை பணியிடத்தை பணியிடமாற்றம் செய்ய வேண்டும்.

| ஆ.சமூக பாதுகாப்புத் திட்டம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 (பொது பிரிவிலிருந்து) | – | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் மிகைப் பணியிடம் –1 | நிரந்தரம் | 2 | 1 | – | – | – |
| 4 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| | மொத்தம் | | 5 | 4 | 1 | 1 | 2 |

| இ. தேர்தல்பிரிவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | தற்காலிகம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | 1 (பொது பிரிவிலிருந்து | – | 1 |
| | மொத்தம் | | 2 | 2 | 1 | 1 | 2 |

| ஈ.வட்ட வழங்கல் பிரிவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்) | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 4 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 5 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலையில்) | நிரந்தரம் | 2 | 1 | 1 | – | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| | மொத்தம் | | 6 | 5 | 1 | 1 | 2 |

| நில அளவைத் துறை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட துணை ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உள்வட்ட அளவர் | நிரந்தரம் | 6 | 5 | 1 | – | 1 |
| 3 | நகர சார் ஆய்வாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 4 | முதுநிலை வரைவாளர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 5 | இளநிலை வரைவாளர் மிகைப் பணியிடம் –1 | நிரந்தரம் | 1 | – | – | – | – |
| 6 | புல உதவியாளர் மிகைப் பணியிடம் –3 | நிரந்தரம் | 6 | 2 | 1 | – | 1 |
| | மொத்தம் | | 16 | 10 | 2 | 1 | 3 |

நில அளவை பிரிவில் 1 இளநிலை வரைவாளர் மிகை பணியிடம் மற்றும் 3 புல உதவியாளர் மிகை பணியிடமும் உள்ளன. இவை தேவைப்படும் இடங்களில் மாற்றம் செய்ய வேண்டும்.

## சுருக்கம்

| வ. எண் | பிரிவின் பெயர் | சத்தியமங்கலம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | சத்தியமங்கலம் வட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள் | தாளவாடி வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | தாளவாடி வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | தாளவாடி வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 36 | 25 | *1+6=7 | 4 | 11 |
| 2 | சமூக பாதுகாப்பு திட்டம் | 5 | 4 | 1 | 1 | 2 |
| 3 | தேர்தல் பிரிவு | 2 | 2 | 1 | 1 | 2 |
| 4 | வட்ட வழங்கல் பிரிவு | 6 | 5 | 1 | 1 | 2 |
| 5 | நில அளவை பிரிவு | 16 | 10 | 2 | 1 | 3 |
| | மொத்தம் | 65 | 46 | *1+11=12 | 8 | 20 |

* 1 தட்டச்சர் பணியிடம் அம்பாசமுத்திரம் வட்டத்திலிருந்து சேரன்மகாதேவி வட்டம் பிரிக்கப்பட்டபோது ஏற்பட்ட மிகைப் பணியிடம்

**மிகைப் பணியிடம்**

| | |
|---|---|
| உதவியாளர் | 2 |
| இளநிலை உதவியாளர் | 1+1=2 |
| இளநிலை வரைவாளர் | 1 |
| புல உதவியாளர் | 3 |
| மொத்தம் | 8 |

(iii) தற்போதுள்ள சத்தியமங்கலம் வட்டத்திற்கு 46 பணியிடங்கள் தொடர அனுமதிக்கலாம். மிகை பணியிடமாக கண்டறியப்பட்டுள்ள 8 பணியிடங்கள் தேவையான இடத்திற்கு புதிய வட்டம் துவங்கப்பட்டவுடன் மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அப்பணியிடம் காலியாக வைக்கப்படவேண்டும்.

(iv) மறுபரவலமர்த்தல் மூலம் தாளவாடி வட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய பணியிடங்கள் தளவாடங்களுடன் தாளவாடி வட்டத்திற்கு மாற்றப்படவேண்டும்.

(v) மசால்சி மற்றும் இரவுக்காவலர் பணியிடங்களை அரசாணை (நிலை) எண்.49, ப(ம)நிசீ துறை, நாள் 14.5.2002–ன்படி வெளிமுகமை மூலம் நிரப்பப்பட வேண்டும்.

(vi) ஒட்டுநர் பணியிடம், அரசு கடித (நிலை) எண்.121/P/2006-1, ப(ம)நிசீ துறை, நாள் 10.8.2006 மற்றும் அரசாணை (நிலை) எண்.255, ப(ம)நிசீ துறை, நாள் 06.12.2007–ன்படி டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

.. 6 ..

(vii) மற்ற அனைத்து பணியிடங்களும் நிரப்பப்படும்போது உரிய விதிகள் மற்றும் அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்

(viii)புதியதாக உருவாக்கப்படும் தாளவாடி வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்கு பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

<u>தொடரும் செலவினங்கள்:</u>

| வ. எண். | விவரம் | ரூ |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் தோராயமாக (ஆண்டொன்றுக்கு) | 37,10,316 |
| 2. | வாடகை | பொதுப்பணித்துறை பரிந்துரையின்பேரில் நிர்ணயிக்கலாம் |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4. | எரிபொருள் (டீசல்) | 96,000 |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | **39,51,816** |

<u>தொடராச் செலவினங்கள்:</u>

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை | ரூ |
|---|---|---|---|
| 1. | ஈப்பு | 1 | 5,56,000 |
| 2. | கணினி | 5 | 1,50,000 |
| 3. | பிரிண்டர் (அச்சுபதிப்பு) இயந்திரம் | 5 | 50,000 |
| 4. | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 50,000 |
| 5. | பேக்ஸ் (தொலையச்சு) | 1 | 10,000 |
| 6. | தளவாடங்கள் | | 1,50,000 |
| 7. | தீயணைப்பான் | 2 | 10,000 |
| 8. | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 9. | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| | | மொத்தம் | 10,07,000 |

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(I) <u>பணியாளர் சம்பளங்கள்</u>

(i) <u>வருவாய் பணியிடங்கள்</u>

2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I. திட்டத்தில் சேராதது –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) <u>நில அளவைப் பணியிடங்கள்</u>

2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I. திட்டத்தில் சேராதது – AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iii) <u>குடிமைப் பொருள் பணியிடங்கள்</u>

3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I. திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – I. திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) <u>05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.31,500/–</u>
தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) <u>05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) <u>05 அலுவலகச் செலவுகள் – 05 அறைகலன்கள் ரூ.1,50,000/–</u>
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) <u>19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.95,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(உ) <u>21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.5,56,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(ஊ) <u>45பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.96,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(எ) <u>76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.2,00,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணியாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணம் ஒப்பளிப்பு செய்வதன்மூலம் செலவிடப்படலாம். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு

எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–ன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2015–2016 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய தாளவாடி வட்டம் 09.02.2016–ஆம் நாள் முதல் செயல்படும்.

9. புதிய தாளவாடி வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 5–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.10089/மை.ம.ஆ.பி நாள் 08.02.2016–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2211 (இரண்டாயிரத்து இருநூற்று பதினொன்று).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. வெங்கடேசன்,**
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு.
மாவட்ட கருவூல அலுவலர், ஈரோடு.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (துணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (துணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.

முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–9.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம்,
இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–90

**நகல்:**
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்(வ.செ.பொது–I/வ.செ.பொது–II/வருவாய்/கக–3/கூஉ(ம)நுபா/
பொதுப்பணி-I/மை.மஆபி) துறை, சென்னை–9.
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–9.
இகோ/உதிரி–2.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 9.2.16.
9/2/16

## அறிவிக்கை–1

சத்தியமங்கலம் வட்டத்தில் வட்டப் பிரிவினைக்கு முன் உள்ள கிராமங்களின் பெயர்கள் குறுவட்டங்கள் வாரியாக பின்வருமாறு:

| வ. எண். | வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வ. எண். | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் | 1. தாளவாடி (20 கிராமங்கள்) | 1 | 2.மல்லன்குழி |
| | | | 2 | 1.அருளவாடி |
| | | | 3 | 5.பனகஹள்ளி |
| | | | 4 | 8.தொட்டமுதுகரை |
| | | | 5 | 9.எரகணஹள்ளி |
| | | | 6 | 7.கெட்டவாடி |
| | | | 7 | 6.கொங்கனஹள்ளி |
| | | | 8 | 15.மரூர் |
| | | | 9 | 12.தொட்டகாஜனூர் |
| | | | 10 | 14.தாளவாடி |
| | | | 11 | 13.சிக்ககாஜனூர் |
| | | | 12 | 10.திகினாரை |
| | | | 13 | 11.கரளவாடி |
| | | | 14 | 4.பையண்ணபுரம் |
| | | | 15 | 3.மாதஹள்ளி |
| | | | 16 | 18.தலமலை |
| | | | 17 | 16.இக்கலூர் |
| | | | 18 | 17.நெய்தாளபுரம் |
| | | | 19 | 19.ஆசனூர் |
| | | | 20 | 20.திங்களூர் –அ, ஆ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2. சத்தியமங்கலம் (16 கிராமங்கள்) | 21 | 36.ராஜன்நகர் |
| | | | 22 | 37.புதுப்பீர்கடவு |
| | | | 23 | 32.சிக்கரசம்பாளையம் |
| | | | 24 | 35.பட்டவர்த்தி அய்யம்பாளையம் |
| | | | 25 | 28.மலையடிப்புதூர் |
| | | | 26 | 26.தாசரிபாளையம் |
| | | | 27 | 59.கொமராபாளையம் |
| | | | 28 | 60.ஆலத்துக்கோம்பை |
| | | | 29 | 61.சதுமுகை |
| | | | 30 | 29.சத்தியமங்கலம் |
| | | | 31 | 30.வரதம்பாளையம் |
| | | | 32 | 31.கோட்டுவீராம்பாளையம் |
| | | | 33 | 58.ரங்கசமுத்திரம் |
| | | | 34 | 33.இக்கரைநெகமம் |
| | | | 35 | 52.அக்கரைநெகமம் |
| | | | 36 | 53.கோணமூலை |
| | | 3. அரசூர் (8 கிராமங்கள்) | 37 | 54.செண்பகப்புதூர் –அ,ஆ |
| | | | 38 | 65. உக்கரம் –அ, ஆ, இ |
| | | | 39 | 56.பழைய கலையனூர் |
| | | | 40 | 55.புதுக்கலையனூர் |
| | | | 41 | 57.அரியப்பம்பாளையம் |
| | | | 42 | 63.இண்டியம்பாளையம் |
| | | | 43 | 64.அரசூர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 44 | 62.மாக்கினாங்கோம்பை |
| | | 4. குத்தியாலத்தூர் (6 கிராமங்கள்) | 45 | 24.கெம்பநாயக்கன்பாளையம் |
| | | | 46 | 27.கொண்டப்பநாயக்கன் பாளையம் |
| | | | 47 | 25.செல்லிபாளையம் |
| | | | 48 | 23.குத்தியாலத்தூர் |
| | | | 49 | 22.குன்றி |
| | | | 50 | 21.கூத்தம்பாளையம் |
| | | 5. பவானி சாகர் (13 கிராமங்கள்) | 51 | 51.பூசாரிபாளையம் |
| | | | 52 | 50.அக்கரைதத்தப்பள்ளி |
| | | | 53 | 49.கரிதொட்டம்பாளையம் |
| | | | 54 | 46.பனையம்பள்ளி |
| | | | 55 | 44.அய்யம்பாளையம் |
| | | | 56 | 45.பெரியகள்ளிப்பட்டி |
| | | | 57 | 43.தொப்பம்பாளையம் |
| | | | 58 | 42.தொட்டம்பாளையம் |
| | | | 59 | 41.முடுக்கன்துறை |
| | | | 60 | 40.புங்கார் |
| | | | 61 | 38.இக்கரைதத்தப்பள்ளி |
| | | | 62 | 39.கொத்தமங்கலம் |
| | | | 63 | 34.பகுத்தம்பாளையம் |
| | | 6. புஞ்சை புளியம்பட்டி (13 கிராமங்கள்) | 64 | 66.விண்ணப்பள்ளி |
| | | | 65 | 48.குரும்பபாளையம் |
| | | | 66 | 67.புங்கம்பள்ளி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 67 | 74.தச்சுபெருமாபாளையம் |
| | | | 68 | 47.சுங்கக்காரன்பாளையம் |
| | | | 69 | 68.நல்லூர் |
| | | | 70 | 71.புஞ்சை புளியம்பட்டி |
| | | | 71 | 70.மாதம்பாளையம் |
| | | | 72 | 69.மாராயிபாளையம் |
| | | | 73 | 75.காவிலிபாளையம் |
| | | | 74 | 72.காராப்பாடி |
| | | | 75 | 73.செல்லப்பம்பாளையம் |
| | | | 76 | 76.வரப்பாளையம் |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர். 9.2.16.

## அறிவிக்கை–2

சத்தியமங்கலம் வட்டத்தில் வட்டப் பிரிவினைக்குப் பின் உள்ள கிராமங்களின் பெயர்கள் குறுவட்டங்கள் வாரியாக பின்வருமாறு

| வ. எண் | வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வ. எண் | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் | 1. சத்தியமங்கலம் (16 கிராமங்கள்) | 1 | 36.ராஜன்நகர் |
| | | | 2 | 37.புதுப்பீர்கடவு |
| | | | 3 | 32.சிக்கரசம்பாளையம் |
| | | | 4 | 35.பட்டவர்த்தி அய்யம்பாளையம் |
| | | | 5 | 28.மலையடிப்புதூர் |
| | | | 6 | 26.தாசரிபாளையம் |
| | | | 7 | 59.கொமராபாளையம் |
| | | | 8 | 60.ஆலத்துக்கோம்பை |
| | | | 9 | 61.சதுமுகை |
| | | | 10 | 29.சத்தியமங்கலம் |
| | | | 11 | 30.வரதம்பாளையம் |
| | | | 12 | 31.கோட்டுவீராம்பாளையம் |
| | | | 13 | 58.ரங்கசமுத்திரம் |
| | | | 14 | 33.இக்கரைநெகமம் |
| | | | 15 | 52.அக்கரைநெகமம் |
| | | | 16 | 53.கோணமூலை |
| | | 2. அரசூர் (8 கிராமங்கள்) | 17 | 54.செண்பகப்புதூர் –அ, ஆ |
| | | | 18 | 65.உக்கரம் –அ, ஆ, இ |
| | | | 19 | 56.பழைய கலையனூர் |
| | | | 20 | 55.புதுக்கலையனூர் |
| | | | 21 | 57.அரியப்பம்பாளையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 22 | 63.இண்டியம்பாளையம் |
| | | | 23 | 64.அரசூர் |
| | | | 24 | 62.மாக்கினாங்கோம்பை |
| | | 3. குத்தியாலத்தூர் (6 கிராமங்கள்) | 25 | 24.கெம்பநாயக்கன்பாளையம் |
| | | | 26 | 27.கொண்டப்பநாயக்கன்–பாளையம் |
| | | | 27 | 25.செல்லிபாளையம் |
| | | | 28 | 23.குத்தியாலத்தூர் |
| | | | 29 | 22.குன்றி |
| | | | 30 | 21.கூத்தம்பாளையம் |
| | | 4. பவானிசாகர் (13 கிராமங்கள்) | 31 | 51.பூசாரிபாளையம் |
| | | | 32 | 50.அக்கரைதத்தப்பள்ளி |
| | | | 33 | 49.கரிதொட்டம்பாளையம் |
| | | | 34 | 46.பனையம்பள்ளி |
| | | | 35 | 44.அய்யம்பாளையம் |
| | | | 36 | 45.பெரியகள்ளிப்பட்டி |
| | | | 37 | 43.தொப்பம்பாளையம் |
| | | | 38 | 42.தொட்டம்பாளையம் |
| | | | 39 | 41.முடுக்கன்துறை |
| | | | 40 | 40.புங்கார் |
| | | | 41 | 38.இக்கரைதத்தப்பள்ளி |
| | | | 42 | 39.கொத்தமங்கலம் |
| | | | 43 | 34.பகுத்தம்பாளையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 5. புஞ்சை புளியம்பட்டி (13 கிராமங்கள்) | 44 | 66.விண்ணப்பள்ளி |
| | | | 45 | 48.குரும்பபாளையம் |
| | | | 46 | 67.புங்கம்பள்ளி |
| | | | 47 | 74.தச்சுபெருமாபாளையம் |
| | | | 48 | 47.சுங்கக்காரன்பாளையம் |
| | | | 49 | 68.நல்லூர் |
| | | | 50 | 71.புஞ்சை புளியம்பட்டி |
| | | | 51 | 70.மாதம்பாளையம் |
| | | | 52 | 69.மாராயிபாளையம் |
| | | | 53 | 75.காவிலிபாளையம் |
| | | | 54 | 72.காராப்பாடி |
| | | | 55 | 73.செல்லப்பம்பாளையம் |
| | | | 56 | 76.வரப்பாளையம் |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

[signature] 9.2.16.
பிரிவு அலுவலர்.
9/2/16

## அறிவிக்கை–3

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் வட்டத்தை பிரித்து 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளிலிருந்து தாளவாடி வட்டம் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

| வ. எண் | வட்டத்தின் பெயர் | குறுவட்டத்தின் பெயர் | வ. எண் | வருவாய் கிராமத்தின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | தாளவாடி | 1. தாளவாடி (13 கிராமங்கள்) | 1 | 2.மல்லன்குழி |
| | | | 2 | 1.அருளவாடி |
| | | | 3 | 5.பனகஹள்ளி |
| | | | 4 | 8.தொட்டமுதுகரை |
| | | | 5 | 9.எரகணஹள்ளி |
| | | | 6 | 7.கெட்டவாடி |
| | | | 7 | 6.கொங்கனஹள்ளி |
| | | | 8 | 15.மரூர் |
| | | | 9 | 12.தொட்டகாஜனூர் |
| | | | 10 | 14.தாளவாடி |
| | | | 11 | 13.சிக்ககாஜனூர் |
| | | | 12 | 10.திகினாரை |
| | | | 13 | 11.கரளவாடி |
| | | | 14 | 4.பையண்ணபுரம் |
| | | | 15 | 3.மாதஹள்ளி |
| | | | 16 | 18.தலமலை |
| | | | 17 | 16.இக்கலூர் |
| | | | 18 | 17.நெய்தாளபுரம் |
| | | | 19 | 19.ஆசனூர் |
| | | | 20 | 20.திங்களூர் –அ, ஆ |

சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ளடங்கும் மேற்கண்ட கிராமங்கள் மீது சத்தியமங்கலம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளிலிருந்து தாளவாடி வட்டாட்சியரால் கையாளப்படும்.

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர். 9.2.16.

9/2/16